செ.வெ. எண்: 723 நாள்: 06.12.2011

# செய்தி வெளியீடு

"கிராமத்தின் உயர்வே நாட்டின் உயர்வு" என்பதை இலக்காகக் கொண்டு, கிராமப்புற ஏழைகளின் பொருளாதாரத்தினை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

கிராமப்புற பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் கால்நடைகள் நன்கு பராமரிக்கப்படவேண்டும் என்பதை கருத்தில் கொண்டு, கால்நடை மருத்துவமனை மற்றும் கால்நடை மருந்தகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது.

இதன் அடிப்படையில், கால்நடைத் துறையின் கீழ் உள்ள 67 கால்நடை மருத்துவமனைகள் மற்றும் 361 கால்நடை மருந்தகங்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு 22 கோடி ரூபாயும், அறைகலன்கள் வாங்குவதற்காக ரூ3 கோடியும், ஆக மொத்தம் 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ள ஏழை, எளியோருக்கு கறவை பசுக்கள் வழங்கும் திட்டம் மற்றும் வெள்ளாடு/செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்த வேண்டியதன் இன்றியமையாமையையும், அதிகரித்து வரும் கால்நடைகளுக்கு தரமான மருத்துவ சேவை வழங்க வேண்டியதன் அவசியத்தையும் கருத்தில் கொண்டு, தரம் உயர்த்தப்பட்ட 200 கிளை நிலையங்கள் மற்றும் 385 கிளை நிலையங்கள், ஆக மொத்தம் 585 கிளை நிலையங்களை ஊரக கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தவும், இவ்வாறு தரம் உயர்த்தப்பட்ட 585 ஊரக கால்நடை மருந்தகங்களுக்காக, 585 புதிய கால்நடை உதவி மருத்துவர்கள், 585 கால்நடை பராமரிப்பு உதவியாளர் பணியிடங்களை ஏற்படுத்தவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இது மட்டுமின்றி, கால்நடைத்துறையில் ஏற்கெனவே காலியாக உள்ள 258 கால்நடை உதவி மருத்துவர்கள் பதவிகளையும் சேர்த்து மொத்தமாக 843 கால்நடை உதவி மருத்துவர் பணியிடங்களை உடனடியாக நியமனம் செய்யவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும், கால்நடைத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்களை மேற்பார்வையிட, கண்காணிப்பு பிரிவு ஒன்றினை தோற்றுவிக்கவும், மாவட்டங்களிலுள்ள உதவி இயக்குநர் அலுவலகங்களை செம்மைப்படுத்தவும், 1 இணை இயக்குநர், 13 உதவி இயக்குநர்கள் மற்றும் 93 இதர பணியிடங்களை ஏற்படுத்தவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதன் மூலம், கால்நடை பராமரிப்புத்துறையின் சேவைகள் முழுமையாகவும், விரைந்தும் பயனாளிகளை சென்று அடைய வழி வகுக்கும்.

*******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை.
நாள்: 6.12.2011